சுபீட்சம் SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 06.09.2021 supeedsam.com supeedsam@gmail.com


A.Puwanesh
Y.RAJ GOLDSCHMUCK
SPECIALIST IN JEWELLS MAKING & REPAIRING
Tel & Fax : 071 298 17 29
Handy : 079 590 91 98
Bruggwaldstasse 112 9300 Wittenbach Switzerland

# ஐ.நாவிற்கான கடிதத்தால் தமிழரசு கட்சிக்குள் பிளவு

(நமது நிருபர்)

ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரை முன்னிட்டு, ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாருக்கு இலங்கை தமிழரசு கட்சியின் முன்னெடுப்பில் ஆவணமொன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே ரெலோவின் முன்னெடுப்பில், பல கட்சிகள் கையொப்பமிட்ட ஆவணமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன்,

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் தேசியத்தை கோச்சைப்படுத்தும் கருத்துகளை தமிழரசுக் கட்சி ஒரு போதும் அனுமதிக்காது

### விரும்பினால் சம்பந்தன் தனியாக ஐ.நாவிற்கு கடிதம் அனுப்பலாம்; மாவை காட்டம்



(ஜூடின்)

தமிழ் தேசியத்தை கொச்சைப்படுத்தும் கருத்துக்களை தமிழரசுக் கட்சி ஒரு போதும் அனுமதிக்காதது மட்டுமல்ல விரும்பினால் திரு சம்பந்தன் தனியாக ஐ.நாவிற்கு கடிதத்தை அனுப்பலாம் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கடுமையாக தெரிவித்துள்ளார்.

நேற்று இடம் பெற்ற அரசியற் குழு கூட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர்களுக்காக போராடியவர்களை ஐ.நா.வில் காட்டிக் கொடுத்துவிட்டது தமிழ் கூட்டமைப்பு

(யாழ்.கீதன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் விடுதலைக்காக போராடியவர்களை மீண்டும் ஒருமுறை ஐ.நா.வில் காட்டிக் கொடுத்து விட்டது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் , தமிழரசுக்கட்சி ஐ.நாவுக்கு ஒரு வரவு அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் குறித்த வரைவில் தமிழீழ விடுதலைப் புலிகள்

02 ஆம் பக்கத்தில்...



## ஜோர்ஜ் மாஸ்டர் காலமானார்

### சிறந்த தமிழ் தேசப்பற்றாளர் என எரிக் சொல்ஹெய்ம் மகுடம்

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் துறையின் பிரதான மொழி பெயர்ப்பாளரான ஜோர்ஜ் மாஸ்டர் அல்லது தம்பி அப்பா என்றழைக்கப்பட்ட வேலுப்பிள்ளை குமார் பஞ்சரட்ணம் நேற்று காலமானார்.

1936 ஆம் ஆண்டு பிறந்த அவர் தபாலதிபராக பணியாற்றியுள்ள அதேவேளை,1994 ஆம் ஆண்டு காலப் பகுதி

02 ஆம் பக்கத்தில்...



## மட்டக்களப்பில் கொவிட் இறப்புக்கள் அதிகரிப்பு; சடலங்கள் தேக்கம்

### மாவட்டத்திற்குள் மின்னியல் தகனசாலையை உடன் நிறுவுமாறு கோரிக்கை!

(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கென மின்னியல் தகனசாலை ஒன்றினை நிறுவ வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையினால் அதன் பணிப்பாளர் திருமதி.க.கலாரஞ்சனி அவர்களின் ஒப்பத்துடன் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது ஏற்பட்டுள்ள கோவிட் 19 தொற்று காரணமாக மட்டக்களப்பு

02 ஆம் பக்கத்தில்...

## நியூசிலாந்தில் கோல்லப்பட்ட காத்தான்குடி இளைஞன் யார்?



(நமது நிருபர்)

நான் ஒரு தமிழ் முஸ்லிம்.பல தடவைகள் தாக்கப்பட்டு, கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டேன். இதனால் தலைமறைவாகி அகதி அந்தஸ்து பெற 2011 ல் நியூசிலாந்துக்கு வந்தேன் என நியுசிலாந்தில் தாக்குதலில் ஈடுபட்டவேளை சுட்டுக் கொல்லப்பட்ட இலங்கை மட்டக்களப்பு காத்தான்குடியைச்சேர்ந்த அகமட் ஆதில் முகமட் சம்சுடீன் வயது (32) அகதி அந்தஸ்து

02 ஆம் பக்கத்தில்...

## வடக்கில் தேங்கும் சடலங்கள்

வட மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் தகனம் செய்வதற்காக கொரோனா தொற்றால் இறந்த 50 க்கும் மேற்பட்ட வர்களின் சடலங்கள் தேங்கியுள்ளதாக மாகாண சுகாதாரத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

02 ஆம் பக்கத்தில்...

MULTI CONSULTING
Versicherung & Finanz
சமூக அக்கறை எமது இலக்கு
குறைந்த கட்டணத்தில் வீட்டுக்காப்புறுதி
குழந்தைகளுக்கான சேமிப்புக்காப்புறுதி
Im Rietpark 5 ,8180 Bülach, Zürich, Switzerland
info@multiconsulting.ch
079 765 50 57 www.multiconsulting.ch

## நியூசிலாந்து தாக்குதல்தாரியின் நண்பர்களிடம் சிஐடி விசாரணை

நியூசிலாந்தில் பல்பொருள் அங்காடி ஒன்றில் ஆறு பேரை கத்தியால் குத்தி காயப்படுத்திய இலங்கையருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த நபர்களிடம் குற்றப்புலனாய்வு

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் மரணங்கள் 750 ஐ தாண்டியது!

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

வி.ரி.சகாதேவராஜா

கிழக்குமாகாணத்தில் மரணங்களின் எண்ணிக்கை 750 ஐ தாண்டியுள்ளது.இதுவரை 751 மரணங்கள் சம்பவித்துள்ளன என்று கிழக்கு மாகாண

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர் பிரதேசத்தில் மதரஸா அமைப்பதை ஏற்றுக்கோள்ளமுடியாது

### கல்முனை மாநகரசபை உறுப்பினர் ராஜன்



(வி.ரி.சகாதேவராஜா)

தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் ஒரு மதரஸா அமைப்பதானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.கோயில் வீதி காணி விவகாரத்தில் எத்தரப்பையும் பாதிக்காத தீர்வே அவசியம்.

என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினரும் பிரபல சமுகசெயற்பாட்டாளருமான சந்திரசேகரம் ராஜன் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் ஊடகச்சந்திப்பொன்று

08 ஆம் பக்கத்தில்...

கடன்பெறுவது, வீடு வாங்குவது சம்பந்தமான ஆலோசனைகள் தேவையெனில் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
வங்கிக்கடன் பெற்றுக்கொடுப்பதில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.
Kamal GmbH
Kamal Kredit & Hypothek
Kamal Kredit Hypothek
Zürcherstrasse 47b, 8426 Lufingen
043 3335971, 079 6502 615
swisssenthu@hotmail.com
நீங்கள் 5 வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கியிருந்தால் குறிப்பிட்ட வீட்டை வைத்து கடன் பெறலாம். அல்லது இன்னொரு வீடுவாங்குவதற்கு முதலீடு செய்யலாம்.

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598
25605: Cicero

# நியூசிலாந்து தாக்குதல்தாரியின் நண்பர்களிடம் சிஐடி விசாரணை

பிரிவினர் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நபர் தொடர்பில் மேலதிக தகவல்களை பெறுவதற்காக அவரது நண்பர்களிடம் விசாரணை செய்து வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, குறித்த நபருடன் தொடர்பை வைத்திருந்த 3 பேர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (03) ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய இலங்கையரான மொஹமட் சம்சுதீன் ஆதில் என்ற 32 வயதுடைய சந்தேகநபர், ஒக்லாந்து நகரிலுள்ள பல்பொருள் அங்காடிக்குள் நுழைந்து அங்கிருந்த பலர் மீது கத்திக்குத்து தாக்குதலை முன்னெடுத்த போது, ஆறு பேர் காயமடைந்தனர்.

எனினும், நியுசிலாந்து பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில், சம்பவ இடத்திலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காத்தான்குடி பகுதியை சேர்ந்த குறித்த நபர் 2011 ஆம் ஆண்டு நியூசிலாந்திற்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஜோர்ஜ் மாஸ்டர் காலமானார்

தொடக்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் துறையினருடன் இணைந்து மொழிபெயர்ப்புத் துறையில் செயற்பட்டு வந்திருக்கின்றார்.

இலங்கை அரசாங்கத்துடன் சர்வதேச நாடுகள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது பிரதான மொழி பெயர்ப்பாளராகவும் அவர் செயற்பட்டிருக்கின்றார்.

இறுதிப்போரின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்த நிலையில் 2016 ஆம் ஆண்டு 07 ஆம் மாதம் 04 ஆம் திகதி அவருக்கு எதிரான அனைத்து வழக்குகளிலிருந்தும் கொழும்பு பிரதான நீதிமன்றம் அவரை விடுதலை செய்திருந்தது.

அன்றைய சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அவர் தொடர்பான தீர்ப்பினை கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலப்பிட்டிய அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் ஜோர்ஜ் மாஸ்டர் மறைவுக்கு நோர்வேயின் முன்னாள் சமாதானத் துதுவர் எரிக் சொல்ஹெய்ம் இரங்கல் தெரிவித்துள்ளார். சமாதான பேச்சுவார்த்தைகளின்போது நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களைச் சந்திக்கும்போதெல்லாம் எங்களுக்காக சிறந்த மொழிபெயர்ப்பாளராக ஜோர்ஜ் மாஸ்டர் பணியாற்றினார்.

அவர் சிறந்த தமிழ் தேசப்பற்றாளர். சமாதானத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர். அவரது ஆத்மா சாந்தியடையட்டும் எனவும் எரிக் சொல்ஹெய்ம் தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

# நியூசிலாந்தில் கொல்லப்பட்ட காத்தான்குடி இளைஞன் யார்?

கோரியபோது தெரிவித்துள்ளதாக நியுசிலாந்து ஊடகங்கள் செய்தி வெயிட்டுள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது

சூப்பர் மார்க்கெட் பயங்கரவாத தாக்குதலுக்கு காரணமான நபரை நாடு கடத்த அரசு நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக முயற்சித்தது.

ஆனால் அவரது அகதி அந்தஸ்தை பறிப்பதற்கான பலமுறை முயற்சிகள் இறுதியில் தோல்வியுற்றன. இது ஏமாற்றமளிக்கும் செயல்முறை எனநாட்டின் பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார்.

குடிவரவு அதிகாரிகள் அவரது அகதி அந்தஸ்தை ரத்து செய்ய முயன்றுள்ளனர் ஏனெனில் அது மோசடியாக பெறப்பட்டது என்று நம்பப்பட்டுள்ளது.

சம்சுதீன் ஒரு தமிழ் முஸ்லிம். அவர் இலங்கையை விட்டு வெளியேறி, 2011 இல் மாணவர் விசாவில் நியூசிலாந்திற்கு வந்தார்.

அவரும் அவரது தந்தையும் அரசியல் அதிகாரிகளின் அரசியல் பின்னணி காரணமாக இலங்கை அதிகாரிகளுடன் கடுமையான பிரச்சினைகளை அனுபவித்ததாகக் கூறி அவர் அகதி அந்தஸ்தை நாடினார்.

அவரது ஆரம்ப விண்ணப்பம் 2012 இல் நிராகரிக்கப்பட்டது, ஏனெனில் குடிவரவு நியூசிலாந்து அவரது கூற்றுக்கு நம்பகத்தன்மை இல்லை என்று கண்டறிந்தது.

பின் மேல்முறையீடு செய்யப்பட்டபோது சம்சுதீன் டிசம்பர் 2013 இல் குடிவரவு மற்றும் பாதுகாப்பு நீதிமன்றினால் அகதியாக அங்கீகரிக்கப்பட்டார்.

ஆனால் மே 2018 இல் அதிகாரிகள் அவரது அகதி அந்தஸ்தை ரத்து செய்ய விரும்புவதாக அவருக்கு அறிவிக்கப்பட்டு அதாவது அவர் நாடு கடத்தப்படுவார் என தெரிவிக்கப்பட்டது.

இதனால் அவர் மீண்டும் மேன்முறையீடு செய்தார்.

நீதிமன்றத்தில் ஆஜராகிய சம்சுதீன் ''நான் இலங்கைக்கு திரும்புவதில் மிகவும் பயப்படுகிறேன், ஏனென்றால் அங்குள்ள அதிகாரிகளுக்கு நான் பயப்படுகிறேன், நான் எனது நாட்டை விட்டு வெளியேறியபோது இருந்த அதே அபாயங்கள் மற்றும் அச்சங்கள் இன்னும் இலங்கையில் உள்ளன.

''மேலும் தமிழ் இளைஞர்கள் அதிகாரிகளிடமிருந்து இலங்கையில் பல கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நாங்கள் விடுதலைப்புலிகள் என நினைத்து அதிகாரிகளால் எப்பொழுதும் சந்தேகத்தின்பேரில் எம்மைப்பார்ப்பதால் கைது, தடுப்பு, தவறான நடத்தைகள் மற்றும் சித்திரவதைகளை எதிர்கொள்கிறோம். என தெரிவித்துள்ளதாகவும் நீதிபதிஒருவரின் பெயரை மேற்கோள்காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை குறிப்பிட்ட நபர் சம்பந்தமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பிட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

# கிழக்கில் மரணங்கள் 750 ஐ தாண்டியது!

சுகாதார துசேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

இதுவரை திருமலை மாவட்டத்தில் அதிகூடிய 263பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 251 பேரும் ,கல்முனையில் 148பேரும் ,அம்பாறையில் 89பேரும் மரணித்துள்ளனர்.

வழமைக்குமாறாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் தொற்றுகளும் மரணங்களும் நான்கு மடங்காக அதிகரித்துக்காணப்பட்டன.

நேற்றுவரை 44435 தொற்றுக்களும் ,751மரணங்களும் நிகழ்ந்துள்ளன. தற்போது வழங்கப்படும் தடுப்பூசியின் பின்னர் இத்தொகை குறையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கில் அதிஆபத்துநிறைந்த பகுதிகளாக தெஹியத்தகண்டிய களுவாஞ்சிக்குடி உஹன அம்பாறை மட்டக்களப்பு தமன மகாஓயா ஆகிய பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் 468பேர் புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள்.10மரணங்கள் சம்பவித்திருக்கின்றன.

**தடுப்பூசிகள்!**

கிழக்கில் முதலாவது தடுப்பூசிகள் வழங்க 909520 கிடைத்தன. அதில் 833500 ஏற்றப்பட்டன. அதாவது 84வீதமானவர்களுக்கு ஏற்றப்பட்டன. அதில் கூடுதலாக கல்முனை மட்டக்களப்பு சுகாதாரப்பிரிவுகளில் 94வீதமானவர்களுக்கும் இதிருமலையில் 81வீதமானவர்களுக்கும்இ அம்பாறையில் 60வீதமானவர்களுக்கும் முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டன.

இரண்டாவது தடுப்பூசிகள் வழங்க 639600 கிடைத்தன. அதில் நேற்று வரை 49வீதமானவர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளன. அடுத்தவாரமளவில் இரண்டாம் கட்ட இரண்டாவது தடுப்பூசிகள் ஏற்றப்படும்.

# வடக்கில் தேங்கும் சடலங்கள்

சடலங்களை தகனம் செய்ய போதிய மின்தகன மயான வசதி இன்மையாலேயே இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் வடக்கில் 5 மாவட்டங்களிலும் வைத்தியசாலைகளில் பிரேத அறைகளில் கொவிட் தொற்றால் இறந்தவர்களின் சடலங்கள் தேங்கியுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் மட்டும் கொரோனாவால் இறந்தவர்களின் 1% சடலங்கள் தகனம் செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் தேங்கியுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

சடலங்கள் மின் தகனம் செய்வதில் ஏற்பட்ட தாமதத்தால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் கெரோனா தொற்றினால் உயிரிழந்து யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் பாதுகாக்கப்படும் சடலங்களை அனுராதபுரத்தில் மின்தகனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வும் அவர் கூறினார். யாழ். மாவட்டத்தில் கோம்பையன் மயானத்தில் மட்டும் மின்தகனம் செய்ய கூடிய வசதிகள் காணப்படுகின்றபோதும் அங்கு நாளொன்றுக்கு 5 சடலங்களை மட்டுமே தகனம் செய்ய முடியும். இதனால் இறந்தவர்களின் உடல்களை மின் தகனம் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள 4 சடலங்களை அனுராதபுரத்தில் மின் தகனம் செய்யவதற்குரிய ஏற்பாடுகள் இடம் பெற்றுவருகின்றன. எனினும் இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அங்கு செல்வது தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பிரச்சினைகள் ஏற்படாத வண்ணம் தொடர்ந்தும் சடலங்களை அனுராதபுரத்தில் எரிப்பதற்குரிய ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தயாராக இருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை, தகனம் செய்ய முடியாமல் கொரோனாவால் இறந்தோரின் சடலங்கள் தேங்கிக் கிடப்பது குறித்து மத்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டியுள்ள வடக்கு சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சடலங்களை தொடர்ந்தும் பராமரிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன. எனவே மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது

# ஐ.நாவிற்கான கடிதத்தால் தமிழரசு

கோவிந்தன் கருணாகரம், வினோநோகராதலிங்கம் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த நிலையில், இலங்கை தமிழரசு கட்சி தயாரித்த ஆவணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரம், வினோ நோகராதலிங்கம் ஆகியோர் கையொப்பமிட மாட்டார்கள் என அவர்களின் கூட்டணி முக்கியஸ்தர் குறிப்பிட்டார்.

இலங்கை தமிழரசு கட்சி தயாரித்த ஆவணத்தில், பான்கீ மூனால் 2010 இல் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு தயாரித்த அறிக்கையில், இலங்கை இராணுவமும், விடுதலைப் புலிகளும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், மனித உரிமை சட்டங்களை மீறியுள்ளனர்.

இவற்றில் சில போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களாக கருதப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது என பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வாக்கியத்தால், இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன் ஆகியோர் அதிருப்தியில் இருப்பதுடன் மூவரும் தனியாக ஐ.நாவிற்கு கடிதம் எழுதியுள்ளனர்.

தமது அதிருப்தியை ஆவணத் தயாரிப்பில் ஈடுபட்ட சுமந்திரனிடம் அறிவித்துள்ளதாகவும், அவை ஏற்கப்படாததன் காரணமாக கையொப்பமிட மாட்டோம் என உறுதியாக தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பில் கொவிட் இறப்புக்கள் அதிகரிப்பு; சடலங்கள்

மாவட்டத்திலும் பல மரணங்கள் சம்பவித்துள்ளது. இந்த வகையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலிருந்து மட்டும் இதுவரை கோவிட்19 தொற்றினால் சம்பவித்த 202 மரணங்களில் 27 சடலங்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்யப்பட்டுள்ளது.

இச்சடலங்களை தகனம் செய்வதற்காக மட்டக்களப்பிலிருந்து 100 கி.மீ தொலைவில் பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள மின்னியல் தகனச்சாலைக்கு தகனம் செய்வதற்காக கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பொலன்னறுவை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக் குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் அப்பிரிவிற்குட்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோரின் முன் அனுமதி பெறப்பட வேண்டியுள்ளதுடன் மின்னியல் தகனத்தினை மேற்கொள்ளவற்காக திம்புலாகலை பிரதே சபையிடமிருந்தும் அனுமதியைப் பெற்று அதன் பின்னரே குறித்த உடலத்தினை தகனம் செய்வதற்கு அனுப்ப வேண்டிய நிலை உள்ளது.

மேலும், தகனம் செய்வதற்காக சடலம் ஒன்றினை அனுப்புவதற்கு சடலத்தினை ஏற்றிச் செல்வதற்கென ஒரு வாகனம், அச்சடலத்தினை இறக்கி உரிய தகனச்சாலைக்கு கொண்டு சென்று கொடுப்பதற்கான வைத்தியசாலை ஊழியர்களை ஏற்றிச் செல்வதற்காக பிறிதொரு வாகனம். அத்துடன் இரு சாரதிகள் மற்றும் 06 உதவியாளர்கள் என ஆளணியினரும் ஒழுங்கு செய்யப்படவேண்டியுள்ளது. ஆனால் தற்போது காணப்படும் இந் நோய் நிலமை காரணமாக வைத்தியசாலை ஊழியர்களின் வரவில் பெரும் பாதிப் ஏற்பட்டுள்ளதால் உரிய நேரத்திற்கு குறித்த உடல்களை தகனம் செய்வதற்காக அனுப்பி வைப்பதில் கால தாமதம் ஏற்படுவதுடன் வைத்தியசாலையின் பிரேத அறையிலும் இடப்பற்றாக்குறை ஏற்படுகின்றது.

எனவே மேற்படி நிலமையினை கருத்தில் கொண்டு எமது மாவட்டத்தில் இறந்த உடல்களை தகனம் செய்வதற்கு மின்னியல் தகனச்சாலை ஒன்றை நிறுவுவதற்கு பொறுப்புவாய்ந்த அனைவரும் ஒருமித்து தீர்க்கமான முடிவினை எடுத்து மட்டக்களப்பு மாநகர சபை உடனடியாக தகனசாலை ஒன்றினை நிறுவ வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து மிக விரைவாக செயற்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக எமது சமூகம் பல கோடி பணத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி வழங்கியிருக்கின்றது. இவ்வாறான சூழலில் இக்கோரிக்கையை சர்வதேச படுத்துவதினூடாக மிக விரைவாக செயற்படுத்த சரியான தருணமிது. இதை சரியாக மாநகர ஆட்சி பயன்படுத்துமா என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.




# தமிழர்களுக்காக போராடியவர்களை ஐ.நா.வில் காட்டிக்

இழைத்த போர்க் குற்றம் தொடர்பில் விசாரணையை கோருவதாக அறியக்கிடைத்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் இலங்கை அரசாங்கம் தனது படைகள் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை என தெரிவித்து வருகிறது.

இறுதி யுத்தத்தில் அதிகளவிலான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட நிலையில் பல மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றமை தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஐநாவுக்கு அறிக்கைகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அரசைப் பாரப்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தொடர்ச்சியான நிலைப்பாடாகும்.

சர்வதேச விசாரணை வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் காத்திருக்கும் நிலையில் மக்களுக்காகப் போராடியவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என கோருகிறது.

கடந்த மார்ச் மாத ஐ.நா. அமர்விலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தை காப்பாற்றிய நிலையில் மீண்டும் ஒருமுறை அரசாங்கத்தை காப்பாற்றும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. தனது இனத்துக்காக போராடியவர்களை அதே இனத்துக்காக போராடுபவர்கள் காட்டிக் கொடுத்த வரலாறு எம் மண்ணில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான சுமந்திரன் ஒவ்வொரு ஐ.நா. அமர்வுக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் முஸ்லிம் இனச்சுத்திகரிப்பு எனப் பேச ஆரம்பித்துவிடுகிறார். யாரோ ஒரு தரப்பை திருப்திப்படுத்துவதற்காத்தான் அவர் இவ்வாறு பேசுகிறார் என நான் நினைக்கிறேன்.

ஆகவே தமிழ் மக்கள் எமது இனத்தை காட்டிக் கொடுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை அரசியல் பரப்பில் இருந்து அகற்றுவதே எமது இனத்துக்கு விடிவைத் தரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் தேசியத்தை கொச்சைப்படுத்தும் கருத்துகளை தமிழரசுக்

குறித்த கூட்டம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கை இராணுவமும், விடுதலைப் புலிகளும் போர்க்குற்றத்தில் ஈடுபட்டார்கள் என குறிப்பிடும் ஆவணத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்புவதற்கு இலங்கை தமிழ் அரசு கட்சியின் அரசியல்குழுவில் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இன்றைய இணைய வழியாக இடம்பெற்ற இந்த கூட்டத்தில் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, சீ.வீ.கே.சிவஞானம், பொ.செல்வராசா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், த.கலையரசன், கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

தற்போது தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட மாட்டார்கள் என்பது உறுதியானதையடுத்து, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கையொப்பத்துடன் கடிதத்தை வேண்டுமானால் அனுப்பலாம் என மாவை திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார்.

மாவை சேனாதிராசா தனது உரையில் தமிழ் கட்சிகள் கூட்டாக தயாரித்த ஆவணம் அனுப்பப்பட்டிருக்காது, அதனால் அவர்களுடன் பேசி, மீண்டும் ஒரு ஆவணம் தயாரித்து அனுப்பலாமென யோசனை தெரிவித்தார். உடன் சுமந்திரன் அதனை மறுத்தார்.

தமிழ் கட்சிகள் கூட்டாக தயாரித்த ஆவணம் அனுப்பப்பட்டு, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு விட்டது, அதனை நான் உறுதி செய்தேன் என குறிப்பிட்டார். பின்னர், அவர் விளக்கமளிக்கையில், கடந்த 28ஆம் திகதி தமிழ் கட்சிகளின் தலைவர்கள் இணைய வழி கலந்துரையாடலில் ஈடுபட்ட போது, மிக தாமதமாக என்னையும் இணைப்பில் இணைத்தனர்.

அப்போது நடந்த கலந்துரையாடலில் ஐ.நாவிற்கு அனுப்பும் ஆவணத்தை தயாரிக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது.

இரா.சம்பந்தனுடன் கலந்துரையாடி ஆவணம் தயாரிப்பதென அதில் முடிவெடுத்ததால், நான் சம்பந்தனுடன் மட்டும் கலந்துரையாடி ஆவணத்தை தயாரித்தேன். ஆவண தயாரிப்பில் ஈடுபட்டிருந்த போது ரெலோவின் அறிக்கையை, அதன் பேச்சாளர் சுரேன் அனுப்பியிருந்தார், அவர் ஒரு கட்சியின் பேச்சாளர்.

இப்படியான நடவடிக்கையை செய்ய அவர் யார்? அதனால் நாம் அதை கணக்கிலெடுக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளும் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட வசனம் ஏன் இதில் இணைக்கப்பட்டதென கேள்வியெழுப்பப்பட்ட போது, பான்கீ மூனின் நிபுணர்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பகுதியையே அதில் இணைத்தேன் என குறிப்பிட்டார்.

இதையடுத்து, இராணுவமும், புலிகளும் போர்க்குற்றம் புரிந்தார்கள் என்ற ஆவணத்தில் திருத்தம் செய்யாமல் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

நாளை கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு கூட்டத்தை, நாடாளுமன்றத்தில் கூட்டி, தமிழ் கட்சிகள் கூட்டாக ஆவணம் தயாரித்த விடயத்தை ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டது.

# அரசின் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் பொருட்களை வாங்க முடியவில்லையென கிராம புர மக்கள் கவலை

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் சதொச மற்றும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்களில் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் அத்தியாவசிய பொருட்களை மக்கள் பெற்றுக்கொள்ளும் இதேவேளையில் மன்னார் பகுதியில் பல கிராமபுர மக்கள்; இதன் பலாபலன்களை அடையமுடியவில்லையென கவலை தெரிவிக்கின்றனர்.

கொரோனா தொற்று காரணமாக அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் குறிப்பாக போக்குவரத்து சேவைகள், விற்பனை நிலையங்கள் பல நாட்களாக முடக்கப்பட்டுள்ள நிலையில் இருந்து வருகின்றன.

இவைகள் இவ்வாறு இருந்த போதும் மக்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்காக சதொச மற்றும் பல நோக்கு கூட்டுறவு சங்க கடைகள் திறந்து விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருகின்றன.

இதன் போது ஒவ்வொரு வீடுகளிலும் பாவனைகளுக்கு இருந்து வரும் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் மக்கள் நீண்ட வரிசைகளில் நின்று இவற்றை கொள்முதல் செய்வதில் ஆர்வம் காட்டி வருவதாகவும் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதுவும் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் இவற்றை பெறுவதிலேயே மக்கள் முனைந்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம். பேசாலை. அடம்பன். மடு



மற்றும் முருங்கன் ஆகிய பகுதிகளில் மாத்திரமே சதொச விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன.

மேலும் மன்னார் பெரும்நிலப்பரப்பில் பல இடங்களில் பல நோக்கு கூட்டுறவு சங்க விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றபோதும் பல கிராம புறங்களில் இவ்வாறான வசதிகள் இல்லாத நிலையும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக மன்னார் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மன்னார் தீவின் இறுதி எல்லைப் பிரிவில் இருக்கும் தலைமன்னார் பகுதியில் எந்தவித சதொச மற்றும் பல நோக்கு கூட்டுறவு சங்க விற்பனை நிலையங்கள் அற்ற நிலை காணப்படுவதால் தலைமன்னார் பியர், தலைமன்னார் கிராமம், தலைமன்னார் ஸ்ரேசன் ஆகிய பகுதிகளில்; செறிந்து வாழும் மக்கள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களை வாங்க முடியாத நிலையில் இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் பகுதி மக்கள் 15 கிலோ மீற்றர் தூரம் சென்றே பேசாலையிலுள்ள சதொச விற்பனை நிலையத்துக்குச் சென்று இவ் பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டி இருப்பதாகவும் அதுவும் பயணக்கட்டுபாடுகள் அமுலில் இருப்பதால் அங்கும் செல்ல முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இவ் பகுதி மக்கள் கிராமங்களிலுள்ள கடைகளில் சம்பா, வெ.நாடு அரிசி ஒரு கிலோ தலா 180 ரூபாவுக்கும். அரலியா அரிசி 220 ரூபாவுக்கும். சீனி 300 ரூபாவுக்கும், %5 கிராம் பால் மா 100 ரூபாவுக்கும் இவ்வாறு பல பொருட்கள் கூடிய விலை கொடுத்தே வாங்க வேண்டிய நிலையில் தாங்கள் இருப்பதாக கவலை தொவிக்கின்றனர்.

ஆகவே இப் பகுதிகளில் நடமாடும் சேவையில் ஈடுபடும் மரக்கறி விற்பனை போன்று அத்தியாவசிய பொருட்களையும் சதொச அல்லது பல நோக்கு கூட்டுறவு விற்பனை நிலையம் சேவையில் ஈடுபட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என பாதிப்படைந்து வரும் மக்கள் வேண்டுகொள் விடுத்துள்ளனர்.

# கோவிட் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய புதிய இடம்சுகாதார அமைச்சும் அனுமதி



(எப்.முபாரக்)

கொவிட் 19 தொற்றினால் மரணிப்வர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு கிண்ணியா வட்டமடு கிராமத்தில் 10 ஏக்கர் அரச காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இக்காணியை கொவிட் 19 தொழில்நுட்ப குழு ஆய்வுகளை மேற்கொண்டு சிபாரிசு செய்ததையடுத்தே கொவிட் 19 செயலணியினாலும் சுகாதார அமைச்சினாலும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாளை 6 ஆம் திகதி வட்டமடு கிராம கொவிட் 19 விஷேட மையவாடியில் ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இம்மையவாடியில் சுமார் 4000 ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்படுவதற்கான இடவசதியுள்ளதாகவும் கிண்ணியா பிரதேசசபைத் தவிசாளர் கே.எம்.நிஹார் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், தற்போது மையவாடிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மையவாடிக்குள் 14 பாதைகள் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. மையவாடியைச் சுழ சுமார் 10 கிலோ மீற்றர் மதில் எழுப்பப்படவுள்ளது. மின்சார வசதிகள் மற்றும் ஜனாஸாக்களின் உறவினர்களுக்கான வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிழக்கு மாகாண இராணுவ தளபதி உட்பட கொவிட் செயலணி அதிகாரிகள் இம்மையவாடியை பார்வையிடவுள்ளனர். ஓட்டமாவடி மஜ்மா நகர் கொவிட் 19 மையவாடியின் நிலப்பரப்பு ஜனாஸாக்களினால் புரணமாகியுள்ள நிலையில் கிண்ணியா வட்டமடு கிராம மையவாடியை துரிதமாக ஏற்பாடு செய்யும்படி கொவிட் செயலணி வேண்டிக் கொண்டதற்கிணங்க அதன் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன என்றார்.

இதேவேளை புத்தளம் மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் கொவிட் 19 ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு காணிகள் இனங் காணப்பட்டுள்ளதாகவும் கொவிட் 19 செயலணியின் தொழில்நுட்ப குழு இது தொடர்பில் ஆய்வுகளை நடாத்தி வருவதாகவும் சுகாதார அமைச்சின் கொவிட் 19 ஒருங்கிணைப்பாளரும் தொழில்நுட்ப சேவைகள் இயக்குனருமான டாக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி கிழக்கு கடலில் 227.400 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றல்






(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கடலில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது 227 .400 கிலோ கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் அதனை கடத்தி வந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (05) அதிகாலை 1. 30 மணியளவில் ஆழியவளை, வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடற்படையினர் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகு ஒன்றினை கடற்படையினர் நெருங்க முற்பட்ட போது அதில் வந்தவர்கள் தப்பிச் சென்ற நிலையில் அப்படகில் 5 பைகளில் காணப்பட்ட 227.400 கிலோ கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

# அக்கரைப்பற்று சதோச நிறுவனத்தில் சீனி முடிவடைந்ததால் ஏமாற்றத்துடன் திரும்பிய மக்கள்





(வி.சுகிர்தகுமார்)

அரசாங்கம் மக்களுக்கு தேவையான சீனியினை சதோச மூலமாக கொள்வனவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டபோதும் அக்கரைப்பற்று சதோச நிறுவனத்தில் நேற்று காலை 10 மணியுடன் சீனி முடிவடைந்துள்ளதாக சதோச பாதுகாப்பு உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அங்கிருந்து சிலர் விசனமடைந்த நிலையில் வெளியேறினர்.

நீண்ட நேரம் வெயிலின் மத்தியில் நின்ற மக்கள் ஆத்திரமடைந்த நிலையில் தங்களை சதோச அருகில் உள்ள கட்டடத்தின் கீழவாது நிறுத்தி வைக்காமல் வீதியின் ஓரத்தில் காத்திருக்க வைப்பதாகவும் கவலை வெளியிட்டனர்.

இந்நிலையில் நேற்று காலை முதல் குறித்த சதோச நிறுவனத்தின் ஊடாக ஒருவருக்கு 3 கிலோ கிராம் சீனி கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்பட்டது. இதற்கு அரசுக்கு நன்றி தெரிவிக்கும் மக்கள் சதோச நிறுவனத்தில் சீனி இல்லாமல் போனமைக்கு காரணம் என்ன எனவும் கேள்வி எழுப்பினர்.

இன்று காலை 10 மணிக்கு பிற்பாடே இவ்வாறான சம்பவம் நடைபெற்றுள்ள நிலையில் முன்கூட்டியே சீனி இல்லை என தெரிவித்திருந்தால் தாம் வெளியேறி இருப்போம் எனவும் கூறினர்.

இதேநேரம் சில தனியார் விற்பனை நிலையங்களில் இன்று சீனி கட்டுப்பாட்டு விலையினை மீறி விற்பனை செய்யப்பட்ட நிலையில் சில வியாபார நிலையங்களில் 130 விற்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனத்திற்கும் இன்று கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# திருக்கோவில் பொலிஸ் பிரிவில் கை குண்டுகள் பொலிசாரினால் மீட்பு



(திருக்கோவில் நிருபர்)

அம்பாரை திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கவேலாயுதபுரம் மற்றும் பாவட்டாறுபஸ் வயல் பிரதேசத்தில் இருந்து கைக் குண்டுகள் மற்றும் ஒரு மோட்டார் ரக குண்டுகள் என்பன கண்டுபபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்து இருந்தனர்.

இவ் குண்டுகள் அனைத்தும் பொது மக்களின் ஊடாக பொலிசாருக்கு வழங்கப்பட்ட தகவலின் ஊடாக சம்பவ இடங்களுக்கு விரைந்து சென்ற திருக்கோவில் பொலிஸ் குழுவினர் மற்றும் இராணுவ அதிகாரிகள் மேற்படி குண்டுகளை கைப்பற்றி இருந்தனர்.

அந்தவகையில் நேற்று முன்தினம் இரண்டு கைகுண்டுகள் மீட்கப்பட்ட செயலிழக்கச் செய்யப்பட்டு இருந்த அதேவேளை நேற்று மாலை ஒரு மோட்டார் ரக குண்டு பொலிசாரினால் மீட்கப்பட்டு இருந்தன.

இவ்வாறு மீட்கப்பட்ட குண்டுகள் நீதிமன்ற உத்திரவின் பிரகாரம் இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் குண்டுகள் இன்று காலை செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக படைதரப்பினர் தெரிவித்து இருந்தனர்.

# போரதீவுப்பற்று பிரதேச சபையில் ஆளணி வளமின்மையின்மையால் மக்கள் அசௌகரியம்

(துறையூர் தாஸன்)

கிழக்கு மாகாண முதலமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலகத்திற்குட்பட்ட போரதீவுப்பற்று பிரதேச சபையில் ஆளணி வளமின்மையின்மையால், பொது மக்கள் அரச சேவைகள் பெறுவதில் பல்வேறு அசௌகரிய சிரமங்களுக்குள்ளாவதாக தெரியவருகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

போரதீவுப்பற்று பிரதேச சபை இருக்கும் வளங்களைக் கொண்டு சிறப்பாக சேவைகளை முன்னெடுத்தாலும், சேவை பெற வரும் சபைக்குட்பட்ட 43 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள பொதுமக்கள், அன்றாட சேவைகள் பெறுவதில் கால தாமத நிலைக்குள்ளாவதா அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

மண்டூர் மற்றும் பழுகாமத்தில் போரதீவுப்பற்று பிரதேச சபையின் உப அலுவலகங்கள் இயங்கினாலும், அவ்விரு அலுவலகங்களிலும் ஆளணி பற்றாக்குறை தொடர்ச்சியாக நிலவுவதனால் பொதுமக்கள் சேவை பெறுவதில் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தற்போதைய கொரோனா

கொடிய தொற்றுப் பரவல் நோய் நிலைச் சூழலில் சபைக்குட்பட்ட அரச அலுவலகம் மற்றும் பொது இடங்களில் தொற்றுநீக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறைவாகவுள்ளதாகவும், திண்மக்கழிவு சேகரிப்பு, குடிநீர் விநியோக சேவை, கிராமிய நீர் வழங்கல் திட்டம் என்பன முறையாக முன்னெடுக்கப்படுவதில் கால தாமதம் ஏற்படுவதாகவும் பொதுமக்கள் கவலையுடன் அங்கலாய்க்கின்றனர்.

எனவே, பொதுமக்களின் சேவை நலன் கருதி சபை அலுவலக மற்றும் வெளிக்கள வேலைகளுக்கு பணியாளர்களை நியமித்து பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுமாறு மாகாண உயர் அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்படுகிறது.



Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான
காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# நுகர்வோர் சட்டங்களை வலுவாக்காமல் அவசரகால சட்டத்தை கையிலெடுப்பது நாட்டிற்கு நல்லதல்ல

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.



வாஸ் கூஞ்ஞ

பதுக்கி வைக்கப்பட்டுள்ள பொருட்களை மீட்பதற்கு நாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலை நிர்ணயம் செய்யும் நுகர்வோர் சட்டங்கள் போன்ற எத்தனையோ சட்டங்கள் இருக்கிறது அந்த சட்டங்களை வலுவாக்காமல் அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் கையிலெடுத்துள்ளது எமது ஜனநாயக நாட்டிற்கு நல்லதல்ல என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் மன்னார் மாவட்ட காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை (03) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்

இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசர கால சட்டமானது பயங்கரவாத தடைச் சட்டத்தை விட மோசமான விளைவுகளை ஜனநாயகத்தில் உண்டு பண்ணும் எனவே அரசாங்கம் உடனடியாக அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் மன்னார் மாவட்ட காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை (03) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த நாட்டில் அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது ஆனால் ஜனாதிபதிக்கு ஏற்கனவே அதிகாரங்கள் இருக்கின்றது அதே நேரத்தில் இந்த அவசரகால சட்டத்தின் மூலம் முழு அதிகாரங்களையும் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி கொரோனா நோய் தொற்றினை கட்டுப்படுத்துவதை சாட்டாக வைத்துக்கொண்டு ஒரு சர்வாதிகார ஆட்சியை நடைமுறைப்படுத்த விரும்புகிறார் என்பது தெளிவாகிறது மேலும் அதிகாரங்களை இராணுவத்திற்கு அளித்து இப்போது நடைபெறுகின்ற ஆசிரியர்கள் மற்றும் ஏனையவர்களின் ஜனநாயக போராட்டங்களை முடக்கி அவர்களை கைது செய்வதற்கான ஒரு அத்திவாரமாக இந்த சட்டம் கையில் எடுக்கப்பட்டிருக்கிறது.

அந்தவகையில் இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று சொல்லிக்கொண்டு சர்வாதிகார ஆட்சியை நடத்துவதற்கான முன்னெடுப்புகளை இந்த சட்டத்தின் ஊடாக ஜனாதிபதி அவர்கள் செய்து வருகிறார்.

பதுக்கி வைக்கப்பட்டுள்ள பொருட்களை மீட்பதற்கு நாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலை நிர்ணயம் செய்யும் நுகர்வோர் சட்டங்கள் போன்ற எத்தனையோ சட்டங்கள் இருக்கிறது அந்த சட்டங்களை வலுவாக்காமல் இந்த அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் கையிலெடுத்துள்ளது எமது ஜனநாயக நாட்டிற்கு நல்லதல்ல.

அனைவரும் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பார்க்கிலும் இந்த அவசரகாலச்சட்டம் மிகவும் ஆபத்தானது.

அன்றாடம் குரல் கொடுக்கின்ற எமது மக்களின் குரல்களை நசுக்குகின்ற ஒரு சட்டமாக தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் 14 நாளுக்கு ஒரு முறை பாராளுமன்றத்தில் குறித்த சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட இந்த அரசாங்கம் இதை சர்வசாதாரணமாக வெற்றி கண்டு விடும்.

இந்த அவசர கால சட்டத்தால் எதிர்காலத்தில் எவரும் வாய் திறந்தால் பிரச்சனை என்ற நிலை உருவாகும்.

எனவே ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகின்ற இலங்கையில் இந்த அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தனது ஊடக சந்திப்பினூடாக வேண்டுகோள் விடுத்துள்ளார்

# கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கட்டுப்பாட்டு விலையில் சீனி

(ந.குகதர்சன்)



நாடளாவிய ரீதியில் சந்தையில் நிலவிய சீனி விலை ஏற்றத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கட்டுப்பாட்டு விலையில் சீனியினை விநியோகம் செய்யும் தேசிய வேலைத் திட்டம் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கு அமைய மட்டக்களப்பு மாவட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊடாக சீனியை வழங்குவதற்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியின் வழிகாட்டலில் மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வி.தங்கவேல் தலைமையில் மாவட்டம் முழுதும் இடம் பெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.அஹமட் ஹாதியின் மேற்பார்வையில் ஓட்டமாவடி பல நோக்கு கூட்டுறவு சங்க தலைமைக் காரியாலயத்தில் 128 ரூபாவுக்கு சீனி வழங்கப்படுவதாக சங்க தலைவர் எம்.எம்.எம்.ஜெஸ்லினின் தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தல் சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டத்தை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்ட 10 பேர் கைது!

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை-ரொட்டவெவ பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டத்தை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்ட 10 பேரை கைது செய்துள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை- மொரவெவ பொலிஸார், விமானப் படை உத்தியோகத்தர்கள், விஷேட பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட விஷேட சுற்றிவளைப்பின் போது சூதாடிய குற்றச்சாட்டின் பேரில் 10 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொரவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த சந்ரலாலின் ஆலோசனைக்கு அமைவாக குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதீப் உட்படகரு 2646 திசாநாயக்க PS 5069 மனோஜ் PS 61729 நிரோஷனகரு 72415 ரத்னாயக்க PSD 33601 உத்திக PSD 88962 பிரசங்க ஆகியோர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த 35 வயது தொடக்கம் 55 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் எனவும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை தனிமைப்படுத்தல் சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டத்தை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்த சாட்டின் பேரில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் 10 பேரையும் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# மன்னாரில் மேலும் 19 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பகுதியில் வெள்ளிக் கிழமை மேலும் 19 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இத்துடன் மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் 1740 ஆக உயர்ந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இதுவரையும் மேற்கொள்ளப்பட்ட மொத்தம் 27967 பி.சீ.ஆர் பரிசோதனையில் 1740 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதுவரைக்கும் 20 பேர் கொரோனாவினால் இறந்துள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் நாளாந்தம் வெளியிடும் தனநது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்பொழுது மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் சனிக்கிழமை (04.09.2021) பதிவு செய்திருக்கும் தனது அறிக்கையில்

மன்னார் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை (03.09.2021) 19 கொரோனா தொற்றாளர்கள் புதிதாக இனம் காணப்பட்டுள்ளனர்.

இதில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் 09 நபர்களும், முசலி சுகாதார சேவை அதிகாரி பிரிவில் 02 நபர்களும், கடற்படையினர் 02 நபர்களும். வங்காலை மாவட்ட வைத்தியசாலையில் 03 பேரும். அடம்பன், எருக்கலம்பிட்டி, பேசாலை ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளில் தலா ஒருவரும் ஆகிய இடங்களிலேயே இவ் தொற்றாலர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும்

இதுவரை மன்னார் மாவட்டத்தில் 27967 பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதில் 1740 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு இற்றைவரை 20 இடம்பெற்றுள்ளதாகவும் இந்த மாதம் (செப்டம்பர்) 207 பி.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 56 நபர்கள் கொரோனா தொற்றாளர்களாக இவ் மாதம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தனது பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# குருக்கள்மடம் -கிரான்குளம் எல்லைப்பகுதியில் கொட்டப்பட்டுள்ள மருத்துவக் கழிவுகள்

(ரக்ஸனா)



குருக்கள்மடம்-கிரான்குளம் எல்லைப்பகுதியில் பாவித்த மருத்துவ ஊசிகள், மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் குருக்கள்மடம்-கிரான்குளம் எல்லைப்பகுதியில் பாவித்த மருத்துவ ஊசிகள், ஏனைய மருத்துவக் கழிவுப் பொருட்கள் வீசப்பட்டுள்ளதாக அப்பகுதி பிரதேச பொதுமக்கள், ஆலய நிர்வாகம் என பலரும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் கிராமத்தையும், மண்முனை பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் கிராமத்தையும் எல்லையாக கொண்ட மட்டக்களப்பு கல்முனை நெடுஞ்சாலைப் பகுதியில் பொது மக்களுக்கு பாவித்த ஊசிகள், எனைய மருத்துவக்கழிவுப் பொருட்கள், உடைந்த போத்தல் ஓடுகள், பாவித்த பொலித்தீன் பைகள், பாவித்த பிளாஸ்ரிக் பொருட்கள், உடைந்த இலத்திரணியல் கழிவுகள் உள்ளிட்ட பல கழிவுப்பொருட்கள் வீசப்பட்டுள்ளதால் பயணிக்கும், பிரயாணிகளும், பொதுமக்களும், கால்நடைகளும், பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

அருகில் பறவைகள் சரணாலயம், அமைந்துள்ள குளம், மற்றும் குருக்கள்மடம் ஐயனார் ஆலயம் என்பன அமைந்துள்ளன. இவ்வாறு கொட்டப்படும் கழிவுப்பொருட்களால் பறவைகள் சரணாலயமும், ஆலயத்தின் புனிதத்தன்மையும் பாதிக்கப்படுகின்றது.

இதனால் பலரும் பலத்த அசௌரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றார்கள். இப்பகுதியில் பகலில் கழிவுப்பொருட்கள் வீசப்படுவதை காணமுடியாமல் உள்ளதாகவும், அதிகாலைவேளை அல்லது இரவில்தான் இவவாறு மருத்துவக் ககழிவுகளை மிகவும் சூட்சுமமான முறையில் யாமீரொ வீசி வருவதாக அப்பகுதியிலுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் குப்பைகளைக் கொட்டுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் விளம்பரப் பதாகை இடப்பட்டுள்ள போதிலும், அதனைப் பொருட்படுத்தாத சிலரே இவ்வாறு கழிவுகளைக் கொட்டி வருகின்றனர். எனவும் அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல்




புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் 01 நிகழ்வு புரட்டாதி மாதம் 7,8,9,10 ஆம் திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் 7.9.2021 செவ்வாய்க்கிழமை பேராசிரியர் சி.மௌனகுரு (இலங்கை) நாடகமும் ஆற்றுகையும், 8.9.2021 புதன்கிழமை தஞ்சாவூர் உதிரிநாடகநிலம் நாடகச் செயற்பாட்டாளர் விஜயகுமார் (தமிழ்நாடு இந்தியா) கல்விநிலையில் நவீனநாடகத்தின் பங்கு , 9.9.2021 வியாழக்கிழமை அவைக் காற்றுக் கலைக்கழகம் க.பாலேந்திரா ஆணந்தராணி பாலேந்திரா (லண்டன்) கண்ணாடி வார்ப்புக்கள் நாடக அனுபவம் ,10.9.2021 வெள்ளிக்கிழமை பேராசிரியர் பால - சுகுமார் (லண்டன்) ஈழ நாட்டியம் ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளார்.

ஏற்புரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்கள்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# திருகோணமலை மாவட்டத்தில் 38435 குடும்பங்கள் 2000பெற தகுதி மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவிப்பு



(பொன்ஆனந்தம்)

தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள இக்காலப்பகுதியில் அரசாங்கத்தின் எவ்வித கொடுப்பனவும் கிடைக்கப்பெறாத வறிய குடும்பங்களுக்கு 2000 ரூபா உதவித்தொகை கொடுப்பனவு பெறுவதற்காக திருகோணமலை மாவட்டத்தில் 38435 குடும்பங்கள் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தகுதி பெற்றுள்ளதாகவும் உரிய பிரதேச செயலக அதிகாரிகள் மூலம் குறித்த கொடுப்பனவு கிரமமான முறையில் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

மேலும் மாவட்டத்தில் தற்போது கூடியளவு தொற்றாளர்கள் பதிவாகிய பகுதிகளில் மக்களை அறிவுறுத்தும் வகையிலான விசேட செயற்பாடுகள் பிரதேச செயலாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மக்கள் உரிய அறிவுறுத்தல்களை பின்பற்றி நடப்பதன் மூலம் கொவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற முடியும். இக்காலப்பகுதியை கூடிய கவனம் எடுத்து செயற்படல் இன்றியமையாயதது. மக்கள் இவ்விடயத்தில் கூடிய கரிசனை காட்டுவது வேண்டப்படுகின்றது. சில பிரதேசங்களில் மக்கள் முகக்கவசம் அணியாது நடமாடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் தங்களது குடும்பத்தினர் தொற்றுக்குள்ளாகுவது மாத்திரமன்றி சமூகத்திலும் பரவக்கூடிய நிலை ஏற்படும். எனவே பொறுப்புடன் கூடிய வகையில் ஒவ்வொருவரும் நடந்து கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் மக்களிடம் வேண்டிக்கொண்டார்.

மேலும் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பல இடங்களில் தடுப்பூசியின் இரண்டாம் அலகு சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவரையிலும் உரிய வயதுப்பிரிவுகளின் கீழ் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் தங்களுக்கான தடுப்பூசியை உடன் தங்களுக்கு அருகாமையில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு சென்று பெற்றுக் கொள்ளுமாறும் அவர் வேண்டிக் கொண்டார்.

# தேவிலாமுனை வீதியில் லொறி மின்கம்பத்தில் மோதி விபத்து

(படுவான் பாலகன்)

கொக்கட்டிச்சோலை காவல் துறை பிரிவிற்குட்பட்ட தேவிலாமுனை பிரதான வீதியில் லொறியொன்று விபத்துக்குள்ளான சம்பவம் சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

காஞ்சிரங்குடா பகுதியில் இருந்து மணற்பிட்டி பகுதிக்கு மணல் ஏற்றிச்சென்ற லொறியொன்று மின்கம்பத்தில் மோதியதிலேயே இவ்விபத்து சம்பவம் பதிவாகியுள்ளது. இதன்போது மின்கம்பமும் முறிந்து லொறியில் வீழ்ந்துள்ளது.



லொறியினை செலுத்திச் சென்ற சாரதி எவ்வித பாதிப்புமின்றி உயிர்தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அத்தியாவசிய பொருட்கள் விலையினால் மூதூர் பிரதேச மக்கள் விசனம்

(இஃஜாஸ் ஏ பரீட்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கத்தின் காரணமாக மூதூர் பிரதேசத்தில் லங்கா சதொச நிறுனமின்றி, அத்தியவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பினால் பொது மக்கள் பொருட்களை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேசத்தில் கடந்த காலங்களில் இயங்கிக் கெண்டிருந்த லங்கா சதொச நிறுவனம் சில காலமாக எவ்வித காரணமும் இன்றி மூடப்பட்டு கிடக்கிறது.

இது பற்றி லங்கா சதொச நிறுவனத்திற்கு கட்டடம் வழங்கிய உரிமையாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது அரசாங்கத்தினால் 5 வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த நிலையில் 3 வருடத்தின் பின் அதனை மீண்டும் ஒப்படைத்துச் சென்றதாக கட்டிட உரிமையாளர் முகம்மது ஜவாஹிர் தெரிவித்திருந்தார்.

ஆனால் இன்று அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்ட மக்கள் அதனை மீண்டும் மூதூரில் அமைத்துத்தருமாறு உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எனவே இப்பிரதேச பொது மக்களின் நலன் கருதி அரசாங்கத்தால் மீண்டும் மூதூரில் லங்கா சதொச நிறுவனம் ஒன்றை அமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உணவுப்பொருள் விற்பனை நிலையங்களை திறக்க அனுமதி

(வி.ரி.சகாதேவராஜா)



பொதுமக்கள், இன்று திங்கட்கிழமை உணவு பொருட்கள் கொள்வனவுக்காக, மாத்தளை நகரிலுள்ள உணவு பொருட்கள் விற்பனை நிலையங்கள் மளிகை கடைகள் மாத்திரம் காலை 06:00 மணி முதல் பகல் 2:00 மணி வரை திறந்து விற்பனை செய்ய விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது

இவ்வனுமதியை மாத்தளை மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷினால் பொதுமக்களுக்கான விசேட அறிவித்தல் மூலம் விடுத்துள்ளார்.

அவரது அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தொடர்பயண தடை காரணமாக பொது மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து கொள்வதற்கு ஏதுவாக மாத்தளை மாவட்ட கொவிட் தடுப்பு குழுவின் விசேட தீர்மானமனத்துக்கு அமைய மாத்தளை மாநகர மொத்த விற்பனை நிலையங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 06:00மணி முதல் பகல் 2:00 மணி வரை திறந்துவைக்கப்பட்டன.

அதேவேளை , உணவு பொருட்கள் விற்பனை நிலையங்கள் மளிகை கடைகள் மாத்திரம் இன்று(6) திங்கள் காலை 06:00 மணி முதல் பகல் 2:00 மணி வரை திறந்து விற்பனை செய்ய விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது .

ஏனைய விற்பனை நிலையங்கள் (பேக்கரி உணவகங்கள் ஓட்டல்கள் உட்பட ஏனைய விற்பனை நிலையங்களுக்கு ) திறப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

எனவே , அத்தியாவசிய தேவையுடையவர்கள் மாத்திரம் சுகாதார வழிமுறையோடு செயல்படுமாறு கேட்டுக்கொள்வதோடு அநாவசியமானவர்கள் நகருக்கு வரும்பட்சத்தில் பாதுகாப்பு தரப்பினால் கைது செய்யப்படுவார்கள் என்பதால் வருவதை தவிர்க்குமாறும் நகரில் வாகன இடையூரை தவிர்க்குமுகமாக வாகனங்களை நிறுத்துமிடமாக பஸ் நிலையங்கள் கெசினோ பாதை ரத்தொட்ட பாதை பேர்னாட் அலுவிகார மைதான சுற்றுவட்ட பாதைகளை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தேரோட்டமின்றி எளிய முறையில் இடம்பெறவுள்ள உற்சவம்

(படுவான்பாலகன்)

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்வசம் எளிய முறையில் இவ்வருடம் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இவ்வாலய மகோற்சவம் எதிர்வரும் 08ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27.09.2021ம் திகதி நிறைவுபெறவுள்ளது. தொடர்ச்சியாக உள்வீதி திருவிழா மாத்திரமே நடைபெறவுள்ளதாகவும் ஆலய பரிபாலன சபையினர் குறிப்பிட்டனர்.

கொவிட் 19 கொரோனா தொற்றில் இருந்து மக்களைகாப்பாற்றவேண்டும் என்பதனை வேண்டுதலாக கொண்டு பூசை வழிபாடுகள் நிகழ்த்தப்படவுள்ளமையும் எடுத்துக்காட்டத்தக்கது.

வெளிவீதி திருவிழா, தேரோட்டம், திருவேட்டை போன்ற விழாக்கள் நடைபெறமாட்டாது. மேலும் எந்தவொரு பக்தர்களுக்கும் ஆலயத்திற்கு வருகை தந்து வழிபடுவதற்கு அனுமதியில்லை. என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்ததுடன், வீட்டில் இருந்து வழிபாடுகளில் ஈடுபடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மேயர் பிரகாஸின் ஏற்பாட்டில் மாத்தளை சென்.தோமஸில் தடுப்பூசி



(வி.ரி.சகாதேவராஜா)

மாத்தளை மாநகரசபையின் ஏற்பாட்டில் மாநகர சபையின் சுகாதாரப்பிரிவினரால் மாநகரிலுள்ள 30வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

மாத்தளை நகரிலுள்ள சென்தோமஸ் கல்லூரியில் இத்தடுப்பூசி ஏற்றப்பட்டது.

60வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏலவே ஏற்றப்பட்டு நிறைவடைந்த கையோடு

மாத்தளை மாநகரசபை முதல்வர் மேயர் சந்தனம் பிரகாஷ் தலைமையில் மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர். அனுஷ வெலகெதர தலைமையிலான குழுவினர் இச்சிறப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அத்தருணம் மாத்தளை மாநகரசபை முதல்வர் மேயர் சந்தனம் பிரகாஷ் உறுப்பினர் த.மோகன் உள்ளிட்டோரும் தொடர்ச்சியாக தடுப்பூசி போடும் இச்செயற்றிட்டத்தை ஊக்குவித்துவருகின்றனர்.

# புனித உம்ராவுக்கு அழைத்து செல்வதாக மோசடி ஏமாந்து விட வேண்டாம்: முஸ்லிம்களிடம் கோரிக்கை

புனித உம்ராவுக்கு இலங்கையில் இருந்து செல்வதற்கான அனுமதி சவூதி அரேபியாவினால் இதுவரையிலும் வழங்கப்படாத நிலையில் முகவர்கள் உம்ரா செல்வதற்கான ஆயத்தங்களிலும் அதற்காக அவர்கள் பணம் சேகரிப்பதிலும் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் முகவர்கள் தொடர்பில் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவர்களுடைய அனுமதிப் பத்திரம் ரத்துச் செய்யப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளரும் ஹஜ் குழுவின் ஊடகப் பேச்சாளருமான அப்துல் சத்தார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையிருந்து முஸ்லிம்கள் உம்ராவுக்கு செல்வதற்கான அனுமதி இன்னும் சட்டபூர்வமாக வழங்கப்படவில்லை. கொரோனாவால் சவூதி அரேபியா முழு நாடும் முடக்கப்பட்டிருந்தது. முஸ்லிம்களுடைய புனித ஹஜ் உம்ரா கட மைகள் கூட இடை நிறுத்தப்பட்டிருந்தன . ஆனால் தற்பொழுது நாடு திறக்கப்பட்டு உம்ரா போன்ற சமய வழிபாடுகள் நடைபெற்றுவருகின்ற போதிலும் வெளி நாட்டவர்களுக்கான முழுமையான அனுமதி இன்னும் வழக்கப்படவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் உண்மை என்னவென எமது முஸ்லிம்கள் ஆராய்ந்து பார்க்காமல் முகவர்களை நம்பி உம்ரா செல்வதற்காக முற்பணங்கள் செலுத்தியுள்ளனர், உம்ராவுக்கான அனுமதி வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் இலங்கை முஸ்லிம்களாகிய நீங்கள் முகவர்களுக்கு பணங்களைக் கொடுத்து ஏமாற வேண்டாம். சில முகவர்கள் உம்ராவுக்கு அழைத்துச் செல்வதற்காகக் கூறி சிலரிடம் பணம் அறவிடப்பட்ட பிரச்சினைகள் எழுந்துள்ளன. ஒரு நெருக்கடியான கால கட்டத்தில் முஸ்லிம்கள் மிகக் கூர்மையாகவும் தூரநோக்குடனும் அவதானத்துடம் நடந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது .

இத்தருணத்தில் உம்ராவுக்கு அழைத்துச் செல்லும் முகவர்கள் பிழையான அறிவுறுத்தல்களை மக்களுக்கு வழங்கி மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈட பட வேண்டாம் என வேண்டுகோள் விடுப்பதுடன் இது தொடர்பில் உம்ரா முகவர் நிலையங்களின் சங்கங்கள் கூடிய கவனம் செலுத்தி நடந்து கொள்ளல் வேண்டும். இல்லையேல் மோசடிகளில் ஈடுபடும் முகவர்களுடய அனுமதிப் பத்திரம் ரத்துச் செய்யப்படுவதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பிரிவில் தொடரும் நடமாடும் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை !

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ. சுகுணனின் நெறிப்படுத்தலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்ஸீமா வசீரின் தலைமையில் காரைதீவு பிரதேசத்திலும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.அல் அமீன் றிசாட் தலைமையில் சாய்ந்தமருதிலும், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மியின் தலைமையில் கல்முனை தெற்கு சுகாதார பிரிவிலும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் உத்தியோகத்தர்களினால் நடமாடும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாவது தடுப்பூசியினை நிலையங்கலுக்கு சென்று பெற முடியாதவர்கள் மற்றும் அங்கவீனர்களுக்கான நடமாடும் சேவை சுகாதார வைத்திய அதிகாரிகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் தடுப்பூசி வழங்கல் குழுவில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கிராம நிலைதாரிகள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பணியாளர்கள், பல்நோக்கு செயலணி பயிற்சியாளர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.



இதே வேளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கடந்த நாட்களில் பொதுமக்கள் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள மிகவும் ஆர்வத்துடன் தடுப்பூசி செலுத்தும் நிலையங்களுக்கு வருகை தந்து தமக்கான தடுப்பூசியைபெற்றுக் கொண்டதை அவதானிக்க முடிந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கு காலப்பகுதியில் அமைக்கப்படவிருந்த சட்டவிரோத கட்டடம்:நகரசபையினால் முறியடிப்பு

(திருகோணமலை ரவ் பீக் பாயிஸ்)



நாட்டில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தை சாதகமாக பயன்படுத்தி திருகோணமலையில் சட்டவிரோத கட்டடம் ஒன்றை அமைக்க முட்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள இவ் சந்தர்ப்பத்தினை பயன்படுத்திய திருகோணமலை மரத்தடி பிரதேசத்தில் சனீஸ்வரன் ஆலயத்திற்கு அருகில் இவ்வாறு திருகோணமலை நகராட்சி மன்றத்தில் எவ்வித அனுமதியும் இல்லாமல் சட்ட விரோதமாக கட்டிடம் ஒன்றை கட்டுவதற்கு முயற்சி செய்துள்ளதாக திருகோணமலை நகர சபைச் செயலாளர் திரு.ஜெயவிஷ்ணு தெரிவித்தார்.

மேலும் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது...

சம்பவ இடத்தில் எவ்வித கட்டுமான பணிகளை மேற்க்கொள்வாதத்திற்கு திருகோணமலை நீதி மன்றத்தினால் ஏற்கனவே தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும் ஊரடங்கு சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி இவ்வாறு கட்டட நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் பொது மக்களினால் சம்பவ தினமான நேற்று (04) திருகோணமலை நகரசபைச் செயலாளர் திரு.ஜெயவிஷ்ணு அவர்களுக்கு தெரியப்படுத்தியதனை அடுத்து உடன் காலத்திற்கு விஜயம் செய்து இவ்வாறு சட்டவிரோதமாக அமைக்கப்படவிருந்த கட்டடத்தில் வேலைகளை உடன் நிறுத்துமாறு கட்டளையிட்டிருந்தார்.

மேலும் திருகோணமலை நகரசபைச் செயலாளர் திரு.ஜெயவிஷ்ணு அவர்களின் வேண்டுகோளுக்கினங்க குறித்த இடத்திற்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டதுடன் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள இக்கால கட்டத்தில் உரிய சட்ட விரோத கட்டடம் அமைப்பதிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மீள்குடியேற்றத்திட்டத்தினூடாக 89 பயனாளிகளுக்கு நிதி உதவி



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியாவில் மீள்குடியேற்றத் திட்டத்தினூடாக 89 பயனாளிகளுக்கு நிதி வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலகதிற்கு உற்பட்ட சுமார் 89 பயனாளிகளுக்கு மீள்குடியேற்றத்திட்டத்தின் ஊடாக வீடமைப்புக்கான நிதி மற்றும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான 28 மலசல கூடங்கள் அமைப்பதற்கான 2ம் கட்ட நிதியும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வினை கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ் ஏற்பாடு செய்திருந்ததோடு புதிய 607 சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன் சிப்தொர புலமைப்பரிசில் திட்டத்தினூடாக சமுர்த்தி பயனாளிக் குடும்ப மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இதனை அடுத்து 2 பயனாளிகளுக்கு 10 இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவியும் வழங்கப்பட்டதுடன், 67 மீனவ தொழில் செய்யும் மீன்பிடி பயனாளிகளுக்கு வலைகளும் வழங்கப்பட்டதுடன் வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் 10 பயனாளிகளுக்கான முந்திரிகை மரங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவான் அதுகோரல அவர்களும், அவரது இணைப்பாளர்களான எம். சப்ரி மற்றும் ஏ.எம். உவைஸ் அவர்களும், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள , கிண்ணியா பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் , கணக்காளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# திடீர் காலநிலை மாற்றம் காரணமாக பாரிய மீன்கள் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன



(பாறுக் ஷிஹான்,ஏ.எல்.எம்.ஷினாஸ்)

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக பாரிய மீன்கள் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 4 பாரிய சுறாக்கள் மற்றும் திருக்கை போன்ற மீன்கள் தூண்டில் மூலம் பிடிக்கப்பட்டு ரூபா 8 இலட்சம் வரை விற்பனை செய்யப்பட்டது.

12 அடி நீளமான கொப்புறா மீன் ஒன்றும் அப்பகுதி மீனவர்களுக்கு பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த கொப்பறா மீனின் பெறுமதி சுமார் மூன்று இலட்சம் ரூபா எனவும் இதேவேளை குறித்த மீனவரின் வலையில் சுமார் 50 கிலோ கிராம் எடையுள்ள திருக்கை இன மீன் ஒன்றும் பிடிபட்டதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.தற்போது கல்முனை கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், பிடித்த மீன்களை சுகாதார சட்ட விதிமுறைகளை பின்பற்றி விற்பனை செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா காரணமாக பொதுமுடக்கம் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட போதிலும் எவ்வித சிரமமும் இன்றி கடற்தொழில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Call us now!
0791023193
0787437071
MON-FRI
11.30 - 23.30
SATURDAY
11.30 - 23.00
SUNDAY
11.30 - 18.00
GRUNAU 1
ASIANFOOD
RESTAURANT
STARTER
BBQ
GRILL-TANDOORI
SPECIAL NAAN
MIX SABJI
BIRIYANI SPL
CURRY DISHES
FISH SPL
DESERTS - ICE CREAM
COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

# பாடசாலைக்கு சொந்தமான மைதானத்தினை தனியார் மயமாக்கம் மீட்டுத்தருமாறு மாணவர்கள்,பெற்றோர்கள் கோரிக்கை

**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட காக்காமுனை அப்துல் ஹமீது வித்தியாலயத்திற்கு சொந்தமான அரச காணியை மீட்டுத்தருமாறு மாணவர்களும் பெற்றோர்களும் கோரிக்கை விடுகின்றனர்.

1995ம் ஆண்டு கிண்ணியாவை பிறப்பிடமாகக் கொண்ட அப்துல் ஹமீது என்பவரின் மூத்த மகன் தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் தந்தையின் ஞாபகார்த்தமாக பாடசாலையொன்றை நிர்மாணிப்பதற்கு இக்காணியினை வழங்கியிருந்தார்.

இருந்தபோதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் பாடசாலை நிர்வாகம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு தெரியாமல் தனி நபரொருவர் பாடசாலைக்கு சொந்தமான காணியை துப்பரவு செய்து வேலி அமைத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

குறித்த காணி அரச காணி எனவும் கிண்ணியா பிரதேச செயலகம் ஆவணப்படுத்தியிருந்த போதிலும் கடந்த 25 வருடங்களாக பாடசாலை மாணவர்களும்,அப்பிரதேச இளைஞர்களும் விளையாட்டு மைதானமாக பயன்படுத்தி வந்தனர்.

ஆனாலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் போது உழவு இயந்திரத்தை பயன்படுத்தி தனக்கு சொந்தமான காணியென கூறி பாடசாலைக்கு அருகில் வேலி அமைந்துள்ளதாகவும் பெற்றோர்கள் குறிப்பிடுகின்றனர்.

பாடசாலை மாணவர்களின் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு போன்ற செயற்பாடுகள் குறித்த இடத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இடம்பெற்று வந்ததாகவும் அப்பாடசாலையின் அதிபர் அஹமட் ராஜி தெரிவித்தார்.

பாடசாலைக்கு சொந்தமான அரச காணியை தனி நபரொருவர் துப்புரவு செய்து தன்னுடைய காணி என கூறுவது எதிர்கால மாணவர்களுக்கு செய்யும் துரோகம் எனவும் இது விடயமாக கிண்ணியா பிரதேச செயலகம் மற்றும் காணி அலுவலகம் மிக விரைவில் கவனம் செலுத்தி பாடசாலைக்கு சொந்தமான அரச காணியை மீட்டுத் தருவதற்கு உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் எனவும் பெற்றோர்களும் மாணவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பொருட்களைப் பதுக்கி ஏழை மக்களை வருத்தாதீர்கள்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன்

**(துறையூர் சஞ்சயன்)**

கொரோனா மரணம் ஒரு புறம் இருக்க பசியால் பட்டினியால் போசாக்கு இன்மையால் மரணிக்கும் நிலையும் வந்து விடுமோ என்ற அச்சம் நிலவுகிறது. இந்த நிலையில் கொள்ளை இலாபம் ஈட்டுவதற்காகப் பொருட்கள் பதுக்கப்பட்டு வருவது மனிதாபிமானமற்ற செயலாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்கள் பதுக்கப்படுவது தொடர்பாக வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா தொற்றுப் பரவலின் தீவிரத் தாக்கத்தினால் தொற்றாளர்கள், மரணங்கள் அதிகரிப்பு என்று மக்களின் அவலம் அதிகரித்தே காணப்படுகிறது. தினக்கூலி மூலமாக பிழைக்கும் மக்களின் வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள அதே வேளை நாடு முடக்கப்பட்டு அவசர கால நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்நிலையில், விலைவாசிகள் விசம் போல் ஏறுவதனால் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

பொருளாதாரக் கொள்ளை இலாபமா ? மனிதாபிமான நியாயமா ? என்ற தேர்வில் மனிதாபிமான நியாயத்திற்கே முன்னுரிமை வழங்க வேண்டும். அந்த முன்னுரிமையை புறந்தள்ளி விட்டு பொருளாதார இலாபத்திற்கு முன்னுரிமை கொடுப்பதென்பது வேதனைக்குரிய விடயமாகும். இந்த வேளையில் மனித நேய அடிப்படையில் நியாய விலைகளில் பொருட்களைவிற்பனை செய்கின்ற, ஏழைகளுக்கு உதவுகின்ற வர்த்தகர்களை பாராட்டுகிறோம். மாறாக எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்ற அடிப்படையில் பொருட்களைப் பதுக்கி கொள்ளை இலாபம் ஈட்ட விரும்பும் வர்த்தகர்களை மக்கள் சார்பாக கண்டிக்கிறோம்.

தயவு செய்து மக்களின் வறுமையோடும் உயிரோடும் விளையாட வேண்டாம் என்று மனிதாபிமான அடிப்படையில் வினயமாகக் கேட்டுக் கொள்கிறோம். பொறுப்புள்ள அரசாங்கமென்ற வகையில் நியாய விலையில் மக்கள் அத்



தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புகளை இலகுபடுத்த வேண்டும். சதொச மொத்த விற்பனை நிலையங்களில் நியாய விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்யலாமென்று அரசு கூறுகிறது. ஏற்கனவே பல சதொச நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் கொக்கடிச்சோலை, கருவாஞ்சிக்குடி போன்ற இடங்களிலுள்ள சதொச நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. ஓட்டமாவடியில் இயங்கும் சதொச நிலையத்திற்கு 50 கிலோ மீற்றர்கள் பயணம் செய்து பொருட்களை வாங்க வேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர். அதுவும் ஒரு கிலோ கிராம் சீனிக்காகவும், வேறு சில பொருட்களுக்காகவும் மக்கள் அவ்வளவு தூரம் பயணிக்க முடியுமா ? சுண்டங்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்கின்ற நிலையில் மக்கள் திண்டாடுகின்றனர்.

சிறு விவசாயிகள் தமது தேவைக்காகச் சேமிக்கப்பட்ட தானியங்களை முதன்மைப்படுத்தாமல், பாரியளவில் பதுக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் மீது நுகர்வோர் அதிகாரசபை கவனம் செலுத்தி அவற்றை மக்களின் தேவைக்காக வெளிக்கொணர வேண்டும். அதே வேளை அரசின் நிவாரணங்கள் பெயரளவில் கொடுக்கப்படாமல், நியாயமாக கொடுக்கப்பட வேண்டும்.

இன்று நாடு 10 நாட்களுக்கு மேல் முடக்கப்பட்ட நிலையில் ஒரு ஏழைக் குடும்பத்திற்கு ரூபாய் இரண்டாயிரம் மாத்திரம் வழங்கப்படுவதென்பது வெறும் கண்துடைப்பாகவே அமையும். ஒரு நாளைக்கு ரூபாய் ஆயிரம் என்ற அடிப்படையில் முடக்கப்படும் நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நிவாரணத் தொகை அமைய வேண்டும். இதனையும் அரசு கவனத்திற் கொள்ள வேண்டும் என்றார்.

# கிழக்கு மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் அரச கட்டுப்பாட்டு விலையில் சீனி விநியோகம்

**(ஏ.எல்.றியாஸ்)**

கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலும் அரச கட்டுப்பாட்டு விலையில் சீனியினை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில், மாகாணத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் தற்போது ஒரு கிலோ சீனி 125 ரூபாவுக்கு வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மியின் முயற்சியின் பலனாகவும் கூட்டுறவு சேவைகள் சந்தைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆகியோரின் ஒத்துழைப்புடனும் முழுக்கிழக்கு மாகாணத்திலும் அரச நிர்ணய விலையில் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக சீனி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் ஆர்வத்துடன் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விஜயம் செய்து, சுகாதார வழிமுறைகளைப் பேணி சீனியினை கொள்வனவு செய்து வருகின்றனர்.

சீனி தட்டுப்பாடு நிலவுகின்ற இடர்காலத்தில் தற்காலிக தீர்வொன்றுக்காக விரைந்து செயற்பட்ட ஆணையாளர் அஸ்மி கிழக்கு மாகாண பல நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு 60 ஆயிரம் கிலோகிராம் சீனியை வழங்க நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

இதனடிப்படையில் திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை ஆகிய நான்கு பிரிவுகளிலும் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு தலா 15000 கிலோகிராம் சீனி பகிர்ந்தளிக்கப்பட்டு தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தற்போதைய அசாதாரன சூழலில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினூடாக சீனியை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்ட கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் ஆகியோருக்கு மக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

# வட்டகொடை தோட்ட அதிகாரியினால் நிவாரணம் வழங்கல்





**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

வட்டக்கொடை தோட்ட அதிகாரி துல்சங்க ஜயதிலக்கவினால் 35 இலட்சம் நிதியொதுக்கீட்டில் பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள அத்தோட்ட தொழிலாளர்களுக்கு அத்தியாவசிய உணவு பொருட்களை வழங்கப்பட்டது.

வட்டக்கொடை மேற்பிரிவு, வட்டக்கொடை கீழ்பிரிவு, யொக்ஸ்போட் ஆகிய தோட்ட பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து தொழிலாளர்களுக்கும் இந்த நிவாரண பொதிகள் வழங்கப்பட்டன.

கொரோனா பரவல் சற்று குறைந்து ஊரடங்கு தளர்த்தப்பட்டு நாடு சாமானிய நிலைக்கு வந்ததன் பின்னர் தொடர்ச்சியாக மூன்று மாதங்களில் இந்த உணவு பொதிகளுக்கான பணத்தை தொழிலாளர்களின் சம்பளத்தில் அறவிடுவதாகவும் தோட்ட நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# அம்பாறை மாவட்டத்தில் 94 அறநெறிப் பாடசாலைகளுக்கு திருநீற்றுக் குவளை வழங்கி வைப்பு

**(திருக்கோவில் நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் இயங்கி வரும் சுமார் 94 அறநெறிப் பாடசாலைகளுக்கு பாரம்பரியமான தேங்காய் சிறட்டையில் செய்யப்பட்ட திருநீற்றுக் குவளைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் தலைமையில் இன்று மண்டானை பூம்புகார் அறநெறிப்பாடசாலையில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக இடம்பெற்று இருந்ததுடன், நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டு திருநீற்றுக் குவளைகளை வழங்கி வைத்திருந்தார்.

இவ் திருநீற்றுக் குவளைகள் திருக்கோவில் பிரதேசத்தில் மண்டானை சந்தோசபுரம் கிராமத்தில் வசித்து வரும் சுயதொழில் முயற்சியாளர் ஒருவரினால் கழிவுப் பொருட்களை மீள்குழச்சி முறையில் பயன்படுத்தும் நோக்குடன் சிறட்டையில் செய்யப்பட்டு இருந்தன.



இவ் செயற்பாடானது இந்து சமய கலாசார பண்பாட்டு விழிமியங்களை தற்கால சமூகத்தினரும் அறிந்து கொள்ளும் நோக்குடன் இவ் சிறட்டையிலான திருநீற்றுக் குவளை அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது சுயதொழில் முயற்சியாளருக்கு 10ஆயிரம் ரூபா பணமும் வழங்கி வைக்கப்பட்டு இருந்ததுடன் அறணிறப்பாடசாலைகளுக்கான தமிழர்களின் பாரம்பரிய முறையிலான திருநீற்றுக் குவளைகள் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டு இருந்தன.

இந்நிகழ்வில் அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் மாவட்ட இந்து கலசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயராஜ் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# நுவரேலியாவில் கஞ்சா செடிகளை வளர்த்த 4 இளைஞர்கள் கைது

**(க.கிஷாந்தன்)**

நுவரெலியா - கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெத்துன்கம மாவத்தையில், கஞ்சாசெடிகளைவளர்த்த4இளைஞர்களை, கந்தப்பளை பொலிஸார், கைது செய்துள்ளனர்.

கெமுனு மாவத்தை பகுதியை சேர்ந்த இளைஞர்களே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கந்தப்பளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, குறித்த இளைஞர்களின் வீட்டுப் பகுதியை சுற்றி வளைத்த பொலிஸார், அங்கு தேடுதலில் ஈடுப்பட்ட போது, தண்ணீர் தாங்கி ஒன்றுக்கு அருகில் வளர்க்கப்பட்ட மூன்றரை அடி உயரமான இரண்டு கஞ்சா செடிகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, இவர்களை நுவரெலியா மாவட்ட நீதவானிடம் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுப்பதாக, கந்தப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.




# தமிழர் பிரதேசத்தில் மதரஸா அமைப்பதை ஏற்றுக்கோள்ளமுடியாது

## கல்முனை மாநகரசபை உறுப்பினர் ராஜன்

நடைபெற்றது.கல்முனை தமிழர்பிரதேச காணி சர்ச்சை விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உறுப்பினர் ராஜன் கூறுகையில்:

தமிழர்கள் செறிந்துவாழும் கல்முனை இரண்டாம் பிரிவில் அமைந்துள்ள கோயில் வீதியில் தமிழர் ஒருவருக்கு சொந்தமான காணியை முஸ்லிம் ஒருவருக்கு அந்த காணி உரிமையாளர் விற்பனை செய்துள்ளார். முஸ்லிம் ஒருவருக்கு காணியை விற்றதனால் எழுந்த சர்ச்சையை அடுத்து அந்த காணியை தமிழர் ஒருவரே திரும்பிவாங்க முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் (வி. முரளிதரன்) ஏற்பாடு செய்து ஒரு பேட்ச் காணியை ஒரு லட்சம் ரூபாய் வீதம் விற்பனை செய்ய ஆறுமாதம் கால அவகாசமும் வழங்கப்பட்டு எட்டு மாதங்கள் கடந்த நிலையில் இன்னும் அந்த காணியை எந்த தமிழரும் கொள்வனவு செய்ய முன்வரவில்லை. கடந்த தேர்தலில் இந்த காணியை காட்டி பிரச்சாரம் செய்து வாக்குப் பெற்றார் கருணா அம்மான். அந்த வளவின் எல்லை சுவற்றையும் அப்போது உடைத்தார்கள்.

பின்னர் ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியர் ஒருவரின் குடும்பத்தினர் அந்த வளவை கொள்வனவு செய்ய பலமாதங்களின் பின்னர் தயாரான போது ஒரு பேட்ச் காணியை ஒரு லட்சத்தி அறுபதாயிரம் ரூபாய் வீதம் விற்பனை செய்ய காணி உரிமையாளர் இணக்கம் வெளியிட்டார். விலை கட்டுப்படியாகாத காரணத்தினால் அந்த விடயம் கைவிடப்பட்டது. இப்போது அந்த காணியை வாங்க எந்த தமிழரும் முன்வராத காரணத்தினால் அந்த காணியின் சுற்றுமதில் அமைக்கப்பட்டு மதரஸா ஒன்றை அமைக்க வேலைகள் நடைபெற்று வருகிறது. இந்த காணி விடயமானது இனவாத பிரதேசவாத கட்சிவாதங்களை கடந்து மனிதாபிமானத்துடன் அணுக வேண்டிய ஒன்றாக உள்ளது.யாரும் எங்கும் சட்ட ரீதியாக குடியிருக்கலாம். அதனை யாரும் தடுக்க முடியாது. அவர்களின் காணியில் அவர்கள் குடியிருக்க முழு உரிமையும் உள்ளது. ஆனால் அந்த காணியில் மதரஸா கட்டுவது பொருத்தமான ஒன்றல்ல. தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் இவ்வாறு ஒரு மதரஸா அமைப்பதானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். குறித்த காணிக்கு அண்மையில் மிக நீண்ட கால வரலாற்றை கொண்ட கோயில் உள்ளது. தமிழர்களின் மரபுகள் கலாச்சாரம் இதன்மூலம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. முஸ்லிம்கள் செறிந்துவாழும் பிரதேசத்தின் நடுவில் இந்துக்கடவுள் சிலைகளை நிறுவினால் எப்படி இருக்கும்.? அதுபோலவே இந்த செயலும் உள்ளது.

கல்முனை பிரதேச தமிழ் முஸ்லிம் மக்களை பிரித்து மோதவிடும் நிலையை உருவாக்க அம்பாறைக்கு வெளியே இருந்து வந்த வெளியூர் அரசியல்வாதிகள் முயற்சிக்கிறார்கள்.

இந்த விடயத்தில் மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகள் கல்முனை மாமாங்க வித்தியாலயத்தை அண்டிய பிரதேசத்தில் எழுந்த காணிவிவகாரத்தை போன்று இதனையும் அணுகி யாருக்கும் பாதிப்பில்லாத நிரந்தர தீர்வை முன்வைக்க வேண்டும். இப்படியான முரண்பாடுகளை களைய எமது பிரதேசத்திலிருந்தே அரசியல் தலைமைகள் எதிர்காலத்தில் உருவாக வேண்டும்.

கடந்த மாகாணசபைக்கு அம்பாறையிலிருந்து மூன்று ராஜாக்களை அனுப்பினோம். முதலமைச்சராக சிவநேசதுரை சந்திரகாந்தன் இருந்தார். அவர்களினால் அம்பாறைக்கு எதையும் செய்ய முடியாமலே போனது. இப்போது பிள்ளையான் பாராளுமன்ற உறுப்பினராக உள்ளார். கல்முனை பிரதேச செயலகம் தொடர்பில் வாய் திறக்க முடியாது வாய்க்குள் கொழுக்கட்டை வைத்துள்ளார் போலும். சத்தமே வெளிவருவதாக தெரியவில்லை. அவரை மீண்டும் கிழக்கு முதலமைச்சராக கொண்டுவர சிலர் கடும் எத்தனிப்புக்களை செய்து கொண்டு அம்பாறையில் கப்பலை தொடர்ந்து படகுக்கு ஆதரவு திரட்டுகிறார். தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவோர் தமிழ் மக்களின் குரலாக எங்கும் ஒலிக்க வேண்டும் என்றார்.